பெங்களூரில் கொலை செய்யப்பட்ட 7 பேரில் இருவரின் உடல்கள் ஏற்காடு வனப் பகுதியில் மீட்பு

எஞ்சிய உடல்களைத் தேடும் கர்நாடக போலீஸார்

ஏற்காடு, நவ. 7: பெங்களூரில் குடும்பத் தகராறு காரணமாக மனைவி உள்பட குடும்பத்தில் உள்ள 7 பேரைக் கொன்று ஏற்காடு வனப் பகுதியில் உடல்களை வீசியதாக கார் ஓட்டுநர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் ஏற்காடு வனப் பகுதியில் இருந்து இரண்டு பேரின் உடல்களை தமிழக போலீஸார் உதவியுடன் கர்நாடக போலீஸார் சனிக்கிழமை மீட்டனர்.

கர்நாடக மாநிலம், பெங்களூரு ஸ்ரீராமபுரம் பாஷ்யம் சர்க்கிள் பகுதியைச் சேர்ந்தவர் இந்துசேகர் (52), கார் ஓட்டுநர். இவரது மனைவி சுனிதாவுக்கும் (40) இவருக்கும் நீண்ட நாள்களாக குடும்பத் தகராறு இருந்துள்ளது. இதனால் சுனிதா அடிக்கடி தனது தாய் வீட்டுக்குச் சென்று வந்ததாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து,சுனிதாவின் குடும்பத்தினர் மீது இந்துசேகருக்கு வெறுப்பு ஏற்பட்டதால், மனைவியின் குடும்பத்தினரைக் கொலை செய்ய திட்டமிட்டுள்ளார். அதன்படி, வீட்டில் இருந்த மனைவி சுனிதாவை ஆட்டுக்கல்லால் தலையில் தாக்கிக் கொலை செய்துள்ளார். பின்னர், அவரது உடலை துணியில் சுற்றி, சிக்கபள்ளாப்பூர் நந்தி ஹில்ஸ் பகுதியில் வீசியுள்ளார். தொடர்ந்து, தனது தொலைபேசியைச் செயலிழக்கச் செய்து, அருகில் இருந்தவர்களிடம் வெளியூருக்குச் சென்றிருப்பதாகக் கூறி நாடகமாடியுள்ளார்.

பின்னர், தனது மைத்துனர்களான சிவக்குமார் (30), சங்கர் (44) ஆகியோரை வீட்டுக்கு வரவழைத்து, ஆட்டுக்கல்லால் தாக்கிக் கொலை செய்துள்ளார். தொடர்ந்து, சங்கரின் மனைவி திவ்யா(30),சிவக்குமாரின் மனைவி நளினி(29),மாமியார் ரூபாவதி(65), சங்கரின் மகன் புனீத் (7) ஆகியோரையும் அதே முறையில் கொலை செய்து, வெவ்வேறு இடங்களில் உடல்களை வீசியுள்ளார்.

குடும்பத்தினர் அடுத்தடுத்து மாயமானதால், நளினியின் தாய் தூங்கம்மா அளித்த புகாரின்பேரில், பெங்களூரு ராஜாஜிநகர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர். விசாரணையில், இந்துசேகர் தனது மனைவி உள்ளிட்ட 7 பேரையும் கொலை செய்தது தெரியவந்தது. இதையடுத்து, இந்துசேகரை கைதுசெய்த போலீஸார், புனீத்தின் உடலை மீட்டனர். எஞ்சிய 6 பேரின் உடல்களை தேடிவந்தனர்.

இந்த நிலையில், சேலம் மாவட்டம், ஏற்காடு மலைப்பாதையை ஒட்டிய வனப்பகுதியில் சிலரின் உடல்களை வீசியதாக இந்துசேகர் போலீஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார். இதுகுறித்து சேலம் மாவட்ட போலீஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, பெங்களூரு ராஜாஜிநகர் போலீஸார் அமைத்துள்ள தனிப்படையினர் சனிக்கிழமை ஏற்காடு வந்தனர். அவர்கள்,ஏற்காடு போலீஸாரின் உதவியுடன் குறிப்பிட்ட வனப்பகுதியில் உடல்களை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், இந்துசேகர் காரில் ஏற்காடு அடிவாரப் பகுதிக்கு வந்து சென்றது சிசிடிவி கேமராக்களில் பதிவாகியுள்ளதா என்றும் போலீஸார் ஆய்வு செய்தனர்.

2 உடல்கள் மீட்பு: இதனிடையே, ஏற்காடு வந்த கர்நாடக டிஎஸ்பி பிரபாவதி தலைமையிலான சிறப்புப் படை போலீஸார், சேலம் டிஎஸ்பி கபிலன், ஏற்காடு காவல் ஆய்வாளர் அமிர்தலிங்கம் ஆகியோருடன் சேர்ந்து ஏற்காடு நாகலூர் செல்லும் சாலையில் கடுக்காமரம் பகுதியில் உள்ள தனியார் காபி தோட்டத்தில் 30 அடி பள்ளத்தில் உடல்களை சனிக்கிழமை தேடினர்.

அங்கு, போர்வையால் சுற்றப்பட்டு கிடந்த இரண்டு மூட்டைகளைக் கைப்பற்றினர். அதில் இந்துசேகரின் மனைவி சுனிதா, அவரது மாமியார் ரூபாவின் உடல்கள் இருப்பது தெரியவந்தது. அழுகிய நிலையில் இருந்த உடல்களை மீட்டு, பிரேத பரிசோதனைக்கு அனுப்பிவைத்தனர். மேலும், கொலைசெய்யப்பட்டுவீசப்பட்ட எஞ்சிய உடல்களையும் தேடி வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட இந்துசேகர், கடந்த அக்டோபர் 18 ஆம் தேதி இந்த இரண்டு உடல்களையும் ஏற்காட்டில் கொண்டுவந்து வீசியதாக போலீஸாரிடம் தெரிவித்துள்ளார்.

தவெக எம்.எல்.ஏ.விடம் பேரம் பேசிய விவகாரம்: அதிமுக நிர்வாகியிடம் 2-ஆவது நாளாக விசாரணை

மதுரை,நவ. 7: தவெக எம்.எல்.ஏ.விடம் பேரம் பேசப்பட்டது தொடர்பான விவகாரத்தில் அதிமுக நிர்வாகியும், முன்னாள் துணை மேயருமான பி.எம். மன்னனிடம் மதுரை மத்திய குற்றப் பிரிவு போலீஸார் இரண்டாவது நாளாக சனிக்கிழமையும் விசாரணை நடத்தினர்.

தவெக ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சியாகக் கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்க தன்னிடம் ரூ. 15 கோடி முதல் ரூ. 30 கோடி வரை பேரம் பேசப்பட்டதாக அந்தக் கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர் மதார் பதுருதீன் (எ) முஸ்தபா கடந்த புதன்கிழமை மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதையடுத்து, சட்டப்பேரவை உறுப்பினர் முஸ்தபா அளித்த புகாரின் பேரில், அதிமுக நிர்வாகியும், முன்னாள் துணை மேயருமான பி.எம். மன்னனை மதுரை மத்திய குற்றப் பிரிவு போலீஸார் வெள்ளிக்கிழமை கைது செய்து விசாரணை நடத்தினர்.

பின்னர், அவர் மதுரை மாவட்ட ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு, சொந்தப் பிணையில் விடுவிக்கப்பட்டார். மேலும், சனிக்கிழமை (நவ. 7) காலை 10 மணிக்கு விசாரணை அதிகாரி முன் முன்னிலையாக வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதன்படி, சனிக்கிழமை மதுரை மத்திய குற்றப் பிரிவு அலுவலகத்தில் பி.எம். மன்னன் விசாரணைக்கு முன்னிலையானார்.

அப்போது, முஸ்தபாவின் உதவியாளர் கனிராஜாவிடம் வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட விசாரணையில் கிடைத்த தகவல்கள், முஸ்தபா அளித்த புகாரில் குறிப்பிடப்பட்ட விவரங்கள் அடிப்படையில் போலீஸார் மன்னனிடம் பல்வேறு கேள்விகளைக் கேட்டு விளக்கங்களைப் பதிவு செய்தனர். சுமார் 4 மணி நேர விசாரணைக்குப் பிறகு, மன்னன் மத்திய குற்றப் பிரிவு அலுவலகத்திலிருந்து புறப்பட்டார்.

நெடுஞ்சாலையோர உணவகங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி வெளியீடு

சென்னை, நவ.7: அரசுப் பேருந்துகள் நிறுத்தப்படும் நெடுஞ்சாலையோர உணவகங்களுக்கான (மோட்டல்) இ-டெண்டர் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், 'மோட்டல்'களுக்கான வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

அரசு பேருந்துகள் சில குறிப்பிட்ட உணவகங்களில் மட்டுமே நிறுத்தப்படும். அந்த உணவகங்களுக்கு அரசு மூலம் டெண்டர் விடப்படும். அந்த வகையில் தற்போது, மோட்டல்களுக்கான இ-டெண்டர் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், மோட்டல்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

சுத்தமான கழிப்பறை, தரமான உணவு, இலவச குடிநீர், மொபைல் சார்ஜிங், சிசிடிவி கேமரா மற்றும் பயணிகள் ரேட்டிங் வழங்க கியூ ஆர் குறியீடு உள்ளிட்ட வசதிகள் கட்டாயம் இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அடிப்படை வசதிகள் குறித்து 5-க்கு 2-க்கு கீழ் ரேட்டிங் எனில் 10 நாள்களில் சரிசெய்ய அவகாசம் வழங்கப்படும். அதற்குள் சரி செய்யாமல் தொடர்ந்தால் டெண்டர் முழுமையாக ரத்து செய்யப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தரமற்ற வகையில் விதிமுறைகளை மீறிச் செயல்படும் நெடுஞ்சாலை உணவகங்களுக்கு ரூ.2,000 முதல் ரூ.10,000 வரை அபராதம் விதிக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜெம் வீரமணி வழக்கில் விரைவில் குற்றப்பத்திரிக்கை தாக்கல்: சென்னை காவல் துறை

சென்னை, நவ. 7: சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்த வழக்குகளில், ஜெம் வீரமணி மீது விரைவில் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படும் என்று சென்னை காவல் துறை தெரிவித்துள்ளது.

சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் ஜெம் கிரானைட்ஸ் நிறுவன உரிமையாளர் வீரமணி மற்றும் அவருக்கு உடந்தையாக இருந்ததாகக் கூறப்படும் சாந்தி, மகேந்திர சிம்ஹன் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டனர்.

மேலும், இந்த வழக்கு தொடர்பான விடியோவை வைத்திருந்ததாகக் கூறப்படும் கணேசன், வீரமணிக்கு உதவியதாகக் கூறப்படும் நிறுவன மேலாளர் சக்திவேல் மற்றும் கார் ஓட்டுநர்கள் லாசர், பார்த்திபன், பாபு ஆகியோரும் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கில், இதுவரை 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜெம் வீரமணி மீது பாதிக்கப்பட்ட சிறுமிகளின் புகார்களின் அடிப்படையில், இதுவரை 8 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மொத்தம் 12 சிறுமிகள் தொடர்பான புகார்களின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வழக்கில் தொடர்புடையவர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்வதைத் தடுக்கும் வகையில் 5 பேருக்கு எதிராக 'லுக் அவுட்' நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த வழக்கில் தொடர்புடையதாக ஜெம் வீரமணி வீட்டின் காவலாளி எண்ணூரைச் சேர்ந்த சீனிவாசன் கடந்த 2-ஆம் தேதி கைது செய்யப்பட்டார்.

மேலும் ஒரு சிறுமி புகார்: ஏற்கெனவே ஜெம் வீரமணி 8 வழக்குகளிலும், சாந்தி 3 வழக்குகளிலும், மகேந்திர சிம்ஹன் 2 வழக்குகளிலும், லாசர் 5 வழக்குகளிலும், கணேசன் 2 வழக்குகளிலும், சீனிவாசன், சக்திவேல், பாபு, பார்த்திபன் ஆகியோர்கள் தலா ஒரு வழக்கிலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கெனவே பதியப்பட்ட ஒரு வழக்கில், சாட்சியாக இருந்த ஒரு சிறுமி, தானும் எதிரி ஜெம் வீரமணியால் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளானதாகக் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணை நடத்தி வருகிறது.

விரைவில் குற்றப்பத்திரிக்கை தாக்கல்: இதற்கிடையே, போலீஸ் விசாரணையில் லாசர் கொடுத்த தகவலின் அடிப்படையில், பாலியல் வன்கொடுமை குற்றத்துக்கு பயன்படுத்தப்பட்ட வெள்ளை நிற விலை உயர்ந்த சொகுசு காரை போலீஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

இதனிடையே, பாதிக்கப்பட்ட ஒரு சிறுமிக்கு ரூ.2 லட்சம் வழங்க நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டுள்ளது. இந்த விவகாரத்தில் பதியப்பட்ட 8 வழக்குகளில் 2 வழக்குகளின் குற்றப்பத்திரிக்கை வரும் வாரத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட உள்ளதாக சென்னை காவல் துறை தெரிவித்துள்ளது.

தவெக எம்எல்ஏ வெற்றிக்கு எதிரான அன்பில் மகேஸின் வழக்கை நிராகரிக்க மறுப்பு

சென்னை,நவ.7: 'தேர்தல் பிரசாரத்தில் குழந்தைகளை பயன்படுத்தக் கூடாது என்ற தேர்தல் ஆணையத்தின் விதிமுறை, வேட்பாளரைக் கட்டுப்படுத்தும்' என தெரிவித்துள் சென்னை உயர்நீதிமன்றம், திருவெறும்பூர் தவெக எம்எல்ஏ வெற்றிக்கு எதிராக முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் தாக்கல் செய்த தேர்தல் வழக்கை நிராகரிக்க மறுத்துவிட்டது.

அண்மையில் நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் திருவெறும்பூர் தொகுதியில் தவெக சார்பில் போட்டியிட்ட நவல்பட்டு விஜயகுமார்,தன்னை எதிர்த்து திமுக சார்பில் போட்டியிட்ட அன்பில் மகேஸைவிட 8,705 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார்.

விஜயகுமாரின் தேர்தல் வெற்றியைச் செல்லாது என அறிவிக்கக் கோரி அன்பில் மகேஸ் சென்னை உயர்நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி கே.குமரேஷ்பாபு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது விஜயகுமார் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் ஆன்டனி ஆர்.ஜூலியன்,'தேர்தல் பிரசாரத்தில் குழந்தைகளைப் பயன்படுத்தக் கூடாது என்ற தேர்தல் ஆணையத்தின் விதிகளைப் பின்பற்றாததால் விஜயகுமாரின் வெற்றி செல்லாது என அறிவிக்க முடியாது' என வாதிட்டார்.

அதற்கு அன்பில் மகேஸ் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் ரிச்சர்ட்சன் வில்சன், 'அரசியல் சாசனம் வழங்கிய அதிகாரத்தின் கீழ், குழந்தைகளை தேர்தல் பிரசாரத்தில் பயன்படுத்தக் கூடாது என்ற தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகள் சட்டபூர்வமானவை. எனவே, அது தேர்தல் அதிகாரியையும், வேட்பாளரையும் கட்டுப்படுத்தும்' என வாதிட்டார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, 'குழந்தைகளை தேர்தல் பிரசாரத்தில் பயன்படுத்தக் கூடாது என்ற தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகள் சட்டபூர்வமானவை. அது வேட்பாளரைக் கட்டுப்படுத்தும்.

இந்த விதிகளை மீறுவது, தேர்தல் வெற்றியை பாதிக்குமா? என்பது குறித்து இந்த தேர்தல் வழக்கை முழுமையாக விசாரித்தால் மட்டுமே முடிவெடுக்க முடியும்' எனக்கூறி, அன்பில் மகேஸின் தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கோரி தவெக எம்எல்ஏ விஜயகுமார் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.



'ஏஐ' தொழில்நுட்பத்தில் ஊழல் செய்த திமுக: ஆதவ் அர்ஜுனா

சென்னை, நவ. 7: உலகிலேயே செயற்கைத் தொழில்நுட்பத்தில் (ஏஐ) ஊழல் செய்து சாதனை படைத்தது திமுக என பொதுப் பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா கூறினார்.



இது குறித்து அவர், எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவு:

பகுத்தறிவு - சுயமரியாதை - சமுக நீதியை தன் இறுதி மூச்சுவரை தமிழகத்துக்கு கற்பித்தவர் நம் கொள்கைத் தலைவர் தந்தை பெரியார். அவர் வழியில் வந்த பேரறிஞர் அண்ணா, 'மாநில சுயாட்சி' என்ற கொள்கையோடு தலைசிறந்த ஆட்சி நடத்தினார். ஆனால், அவர்கள் வழியில் வந்ததாகச் சொல்லிக்கொண்டு, முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒவ்வொரு துறையிலும் செய்தவை ஊழல் மட்டுமே.

இறுதியில் தந்தை பெரியாரின் பெயரில் அமைந்த நூலகத்துக்கு வாங்கிய புத்தங்களிலும் 'ஏஐ' முறையில் ஊழல் செய்து உலக ஊழல் சாதனையைப் படைத்து நம்மையே திகைக்க வைத்துள்ளனர். இப்படிப்பட்ட ஊழலால் பல கோடிகளைச் சுருட்டியுள்ளனர்.

தமிழ்நாட்டில் உள்ள எத்தனை நூலகங்களில் இதுபோன்ற ஊழல் புத்தகங்கள் புதைந்து கிடக்கிறதோ, அவையெல்லாம் உடனடியாக போர்க்கால அடிப்படையில் கண்டறியப்பட்டு, களையெடுக்கப்பட வேண்டும். புத்தகம் வாங்கியதிலேயே இவ்வளவு ஊழல் என்றால், பல நூறு கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட பெரியார் அறிவுலக கட்டுமானத்தில் எவ்வளவு ஊழல் நடைபெற்றிருக்கும் என்பது குறித்து பொதுப்பணித் துறை வல்லுநர்களைக் கொண்டு ஆராய்ந்து உண்மைகள் விரைவில் வெளிக்கொண்டு வரப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

equitas SMALL FINANCE BANK

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
(Formerly Known as Equitas Finance Ltd)
பதிவு அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை , தமிழ்நாடு - 600002 போன் : 044-42995000, 42995050,

அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV - A யின்படி (விதி 8 (6) யை பார்க்கவும்) - அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பின் மூலம் கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வு தொகை, மின்-ஏல தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் பெயர் & முகவரி	அசையா சொத்துக்களின் விவரங்கள் மற்றும் வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கள் ஏதேனும் இருப்பின்	நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வுத் தொகை	மின் ஏல விற்பனைக்கான தேதி மற்றும் நேரம்	கடன் / மொத்த நிலுவைத் தொகை
அமீர் பாஷா K, ரஹிமாபீ K, தமீம் பாத்திமா A, அனைவரும் வசிக்கும் இடம்: எண் 111 மெயின் ரோடு அதீர் கொளப்பாக்கம் தபோவனம் விழுப்புரம் - 605756	விழுப்புரம் மாவட்டம், அதீர் கொளப்பாக்கம் கிராமத்தின் நத்தம் சர்வே எண்.154/1, 154/6 இல் அமைந்துள்ள 2195 சதுர அடி நிலம் அதனுடன் கட்டிடம் அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. எல்லைகள்: வடக்கில்:திரு.துரைசாமி அவர்கள் உரிமை பெற்ற நிலம், தெற்கில்:திரு.குப்புசாமி அவர்கள் உரிமை பெற்ற மனை, கிழக்கில்: சாலை, மேற்கில்: திருமதி.எழிலரசி அவர்கள் உரிமை பெற்ற நிலம்.	ரூ.10,15,000/- ரூ.1,01,500/- ரூ.10,000/-	28.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். 700009360970 / 600000005492 12.08.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.12,16,035/- மேலும் 13.08.2025 முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (04.11.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.16,60,238/-

சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: அஜித்குமார் 8190005434, மெள்சன் 9626378832, பாஸ்கரன் 7598239524

விருப்பமுள்ள வாங்குபவர்/ஏலதாரர்கள் மூலம் (EMD) முன்வைப்புத் தொகையினை, தேசியமயமாக்கப்பட்ட அல்லது பட்டியலில் உள்ள ஏதேனும் வங்கியின் NEFT/RTGS/DD மூலமாக "Equitas Small Finance Bank Ltd", கணக்கு எண்.200000807725 மற்றும் IFSC Code- ESFB0001001, Bhaggyam Galleria, New No.18, Bazulla Road, T. Nagar, Chennai - 600 017 என்ற பெயரில் உள்ள கணக்கில் செலுத்தி 27.11.2026 அன்றோ அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்க வேண்டும்.

மின் ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை www.equitas.bank.in & https://www.bankeauctions.com என்ற இணையதளம் மூலம் காணலாம்.

நேரடி சுவாதீன அறிவிப்பு

ICICI Bank கிளை அலுவலகம்: ICICI பேங்க் லிட், 4/10, மைத்ரீ டவர், பொம்மனஹள்ளி ஒசூர் பிரதான சாலை, பெங்களூரு-560068

[illegible]

வ. எண்.	கடன்தாரர் பெயர் / கடன் கணக்கு எண்.	சொத்து விவரம் / நேரடி சுவாதீன தேதி	கோரிக்கை அறிவிப்புத் தேதி & கோரிக்கை அறிவிப்பின் படி தொகை (ரூ)	கிளையின் பெயர்
1.	[illegible] TBVLR00006955529 / TBVLR00006955528 / LBVLR00006985401 & LBVLR00006993425	[illegible] சொத்தாகும். நேரடி சுவாதீன நாள்: 04.11.2026.	25 மே 2026 / ரூ. 54,50,316.58/-	கடலூர் & பண்ருட்டி

[illegible]

தேதி: 08.11.2026, இடம்: கடலூர் & பண்ருட்டி உண்மையுள்ள அதிகாரப்பூர்வ அலுவலர், ICICI பேங்க் லிட். சார்பில்

केनरा बैंक Canara Bank கனரா வங்கி

சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை-II சென்னை
எண். 9 & 10, சர் தியாகராய சாலை, தியாகராய நகர், சென்னை - 600 017. கைபேசி : 97401 45622 மின்னஞ்சல்: cb7901@canarabank.com

கோரிக்கை அறிவிப்பு (பிரிவு 13 (2))
கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர்

Ref: COCHN/ARM II/DN/குமரன் தேதி : 05.11.2026

பெறுநர்
திருமதி. K. மாலதி (மறைந்த சட்டப்பூர்வ வாரிசுதாரர் திரு. K. குமரன்), (ஜாமீன்தாரர்),
க/பெ. திரு. K. குமரன்,
திரு. K. சாய்ராம், (மறைந்த சட்டப்பூர்வ வாரிசுதாரர் திரு. K. குமரன்),
த/பெ. திரு. K. குமரன்,
திருமதி. K. பிரகதி (மறைந்த சட்டப்பூர்வ வாரிசுதாரர் திரு. K. குமரன்),
த/பெ. திரு. K. குமரன்,
திருமதி. K. சந்திரா, (மறைந்த சட்டப்பூர்வ வாரிசுதாரர் திரு. K. குமரன்),
க/பெ. திரு. K. குமரன்,
அனைவரின் முகவரி : 268, பிரதான சாலை, செட்டிமுத்து தெரு, நஞ்சலூர், சிதம்பரம் தாலுக்கா - 608 302.

ஐயா,

பொருள் : 2002-ம் வருடத்திய கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச்சட்டம் பிரிவு 13(2)-ன் கீழ் அனுப்பப்பட்ட கோரிக்கை அறிவிப்பு.

2002-ம் வருடத்திய கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச்சட்டத்தின்கீழ் கனரா வங்கி, சொத்து மேலாண்மை கிளை-II (இனி கடன் அளித்தவர் என்று கருதப்படும்)-ஆல் நியமிக்கப்பட்ட கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கின்றபடியால் இந்த அறிவிப்பை வெளியிடுகிறார்.

திரு. K. குமரன், த/பெ. கிருஷ்ணமூர்த்தி, (இனி கடன்தாரர் என்று கருதப்படுவார்) அவர்கள் கீழே குறிப்பிட்டுள்ள **அட்டவணை A**-ல் உள்ள விவரங்களின் படி எங்கள் வங்கியிலிருந்து கடன் வசதிகளைப் பெற்றிருக்கிறீர்கள்.

(அட்டவணை-Bல் குறிப்பிட்டுள்ள நபர்) தாங்கள் **அட்டவணை-B** ல் விவரமாக குறிப்பிட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளுக்கு எதிரான ஒப்பந்தங்களையும் மேற்கொண்டுள்ளீர்கள்.

அட்டவணை-A : கடன்தாரரால் பெறப்பட்டுள்ள கடன் வசதிகளின் விவரங்கள்:

வ. எண்	கடன் கணக்கு எண்.	கடன் தன்மை/ வரம்பு	அனுமதிக்கப்பட்ட தேதி	தொகை (ரூ.)
1	2924619003963	வீட்டுக்கடன்	23-10-2013	ரூ. 10,00,000/-
2	2924285000064	OD	29.05.2013	ரூ. 12,00,000.00/-
3	2924629000008	வீட்டுக்கடன் பிளஸ்	31-05-2016	ரூ. 3,00,000.00/-
4	2924618000001	HOME IMPROVEMENT	07-09-2017	ரூ. 2,75,000.00/-
5	2924710000004	COVID FITL	01-09-2020	ரூ. 76,571.00/-

மேற்குறிப்பிடப்பட்டுள்ள கடன்கள் கீழே அட்டவணையில் விரிவாக குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் மற்றும் அதற்கு தொடர்புடைய ஆவணங்களை வங்கியின் பெயருக்கு அடமானம் செய்து, பெற்று கொண்டுள்ளீர்கள். கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் படி தாங்கள் கடன் தொகை முழுவதும் செலுத்த தவறியதால் தங்களின் கடன் கணக்கு பாரத ரிசர்வ் வங்கி -ஆல் வழங்கப்பட்ட சொத்துக்கள் வழிகாட்டுதல் / அறிவுறுத்தல்களின் படி **30.03.2021** தேதியில் வங்கி "செயலிழந்த கணக்குப் பிரிவில்" (NPA) சேர்த்துள்ளது. எனவே மேற்படி சட்டம் பிரிவு 13 (2)-ன் கீழ் அட்டவணை C-ல் உள்ள விவரங்களின் படி கடன் அளித்தவருக்கு 26.10.2026 அன்று முதல் செலுத்த வேண்டிய **ரூ.43,10,787.16/- (ரூபாய் நாற்பத்து மூன்று இலட்சத்து பத்தாயிரத்து எழுநூற்று எண்பத்து ஏழு மற்றும் பைசா பதினாறு மட்டும்)** மேலும் 1) கணக்கு எண்.**2924619003963**-க்கான வட்டி வருடத்திற்கு 9.10%+2% (அபராதவட்டி) 2) கணக்கு எண்.**2924285000064**-க்கான வட்டி வருடத்திற்கு 10.00%+2% (அபராதவட்டி), 3).கணக்கு எண்.**2924629000008**-க்கான வட்டி வருடத்திற்கு 11.50%+2% (அபராதவட்டி), 4) கணக்கு எண். **2924618000001**-க்கான வட்டி வருடத்திற்கு 11.20%+2% (அபராதவட்டி), 5) கணக்கு எண்.**2924710000004** க்கான வட்டி வருடத்திற்கு 10.25%+2% (அபராதவட்டி), மற்றும் அனைத்து கட்டணங்கள், வங்கியால் ஏற்படக்கூடிய இடைநிகழ் செலவுகள் சேர்த்து இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று தங்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. அவ்வாறு செலுத்த தவறினால் வங்கியின் சட்டம் 13 துணை பிரிவு (4) (a) மற்றும் (b)-ன் கீழ் தனக்குள்ள ஏதேனும் ஒரு அல்லது சகல உரிமைகளையும் பயன்படுத்த வேண்டி வரும் என்று அறியவும்.

மேலும் பிரிவு 13 (13)-ல் உள்ள படி கடன்தாரர் / ஜாமீன்தாரர் கடனுக்கு ஆதாரமாக தரப்பட்டுள்ள பத்திரங்களுக்கு உரிய இதன் அடியில் குறிப்பிட்டுள்ள சொத்தினை எந்த ஒரு வகையிலும் வங்கியின் முன் அனுமதி இன்றி விற்கவோ, குத்தகைக்கு விடவோ அல்லது பிற வழிகளில் மாற்றம் செய்யவோ முயற்சிக்க கூடாது என்றும் அறிவுறுத்தப்படுகிறது. எந்த ஒரு உரிமைக்கும் தடையின்றி நடைமுறையில் உள்ள பிற சட்டங்களை ஒட்டியும் இந்த அறிவிப்பு அனுப்பப்படுகிறது.

பிணையம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்பதில் கிடைக்கும் கால அவகாசத்தை கருத்தில் கொள்ளுமாறு சட்டப்பிரிவு 13 (8)-ன் நிபந்தனைகளுக்கு கடன் வங்கியவரின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களாகிய தங்களுக்கு வங்கியில் தாங்கள் கடைசியாக கொடுத்துள்ள முகவரிக்கு ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலம் அறிவிப்புகள் அனுப்பப்பட்டுள்ளது.

சட்டம் மற்றும்/அல்லது நடைமுறையில் உள்ள வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் கடன்தாரர்களுக்கு கிடைக்கும் வேறு எந்த உரிமைகளுக்கும் பாரபட்சம் இல்லாமல் இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது.

இந்த அறிவிப்பானது இதற்கு முன்பு 06-05-2021 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பிற்கு (எந்த அயனை மெயவைத) மாற்றாக வெளியிடப்படுகிறது. இதன் விளைவாக, அந்த அறிவிப்பின் அடிப்படையில் தொடங்கப்பட்ட அனைத்து SARFAESI சட்ட நடவடிக்கைகளும் - 31-07-2021 தேதியிட்ட சொத்து கையகப்படுத்தல் அறிவிப்பு உட்பட - திரும்பப் பெறப்படுகின்றன அல்லது திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படும். அதே சமயம், SARFAESI சட்டத்தின் கீழ் புதிய நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கான வங்கியின் உரிமை தொடர்ந்து நீடிக்கும்.

அசையா சொத்துக்களின் விவரம்: சொத்தின் உரிமையாளர் : திரு. K. குமரன் (லேட்) : சிதம்பரம் பதிவு மாவட்டம், சிதம்பரம் துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட சிதம்பரம் தாலுக்கா, செட்டிமுத்து கிராமம் 1. மறு சர்வே எண்.14/3ன்படி மொத்தமுள்ள 0.05 சென்ட் (குமரன் அவர்களின் மனைவிக்கு விற்கப்பட்ட தெற்கு பகுதியில் உள்ள 0.03 சென்ட் அதாவது 1308 சதுர அடி தவிர) வடக்கு பகுதியில் உள்ள 0.03 சென்ட். 2. மறு சர்வே எண்.14/4ன்படி மொத்தமுள்ள 0.09 சென்ட் (குமரன் அவர்களின் மனைவிக்கு விற்கப்பட்ட தெற்கு பகுதியில் உள்ள 0.04 1/4 சென்ட் அதாவது 1962 சதுர அடி தவிர) வடக்கு பகுதியில் உள்ள 0.04 1/2 சென்ட் சேர்த்து மொத்த பரப்பளவு - 0.07 1/2 சென்ட் (3270 சதுர அடி) நிலம் மற்றும் அங்குள்ள கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : K. மாலதி அவர்களின் குடியிருப்பு மனைக்கு வடக்கே, காட்டுமன்னார் கோயில் சாலைக்கு தெற்கே, கவியபெருமாள் படையாட்சி அவர்களின் குடியிருப்பு மனைக்கு கிழக்கே, இளநங்கூர் சாலைக்கு மேற்கே மற்றும் அங்குள்ள RCC ஒடு குடியிருப்பு கட்டிடம் மற்றும் மின்வாரிய இணைப்பு, நத்தம் நிலவரி சிட்டா-ன்படி புதிய துணைப்பிரிவு சர்வே எண்.14/3A1 மற்றும் 14/4A, பட்டா எண்.39.

இடம் : சென்னை அங்கீகாரம் பெற்ற அதிகாரி
தேதி : 05.11.2026 கனரா வங்கி